# ஜெயங்கொண்டம் நகராட்சி

| Date of Meeting of the Council | MCR | NO SERIAL NUMBER AND SUBJECT IN THE AGENDA | DECISION OF COUNCIL |
|---|---|---|---|
| 17 .12 . 20 19 | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2 0 1 9ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17 .12 . 2 0 1 9 ம் செவ்வாய்க் கிழமை மாலை 3 . 0 0 மணியளவில் அவசரக் கூட்டம்.<br>**தனி அலுவலர்,**<br>**ஜெயங்கொண்டம் நகராட்சி** | |
| 17 .12 . 20 19 | 149 | **பொருள் எண்.1**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ளும் 18 வாகன பணிகளை மேற்பார்வையிடவும், பணியாளர்கள் பணிபுரியும் நேரம், வருகைப் பதிவேடு போன்றவைகளை எளிமையாக கண்காணித்திட வாகனங்களில் GPS கருவி பொருத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடமிருந்து ந.க.எண்.53B/2019/ஜே2 நாள்.07.02.2019-ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. அதனடிப்படையில் வாகனங்களில் Vehicle Tracking GPS Monitoring System பொருத்திட உத்தேச செலவினம் ரூ.2.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**ந.க.எண். 353 / 2020 / அ4** | அனுமதிக்கப்பட்டது |
| 17 .12 . 20 19 | 150 | **பொருள் எண்.2**<br>ஜெயங்கொண்டம் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 8-வது மாநில (8th SHPC) உயர்மட்ட குழு கூட்டத்தின்படி, 16 எண்ணிக்கை கொண்ட பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம்(BOV) மற்றும் 3 எண்ணிக்கை கொண்ட இலகுரக வாகனம் (LCV) வாங்குவதற்கு தொகை ரூ.45.60 இலட்சத்திற்கு ந.க.எண்.1191/P3/2019 நாள்.21.01.2019-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 22.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகராட்சியில் ஏற்கனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் (SWM) கீழ் நுண் உரம் தயாரிக்கும் மையம் - 2 எண்ணிக்கை, 12 எண்ணிக்கை கொண்ட பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம்(BOV) மற்றும் 4 எண்ணிக்கை கொண்ட இலகுரக வாகனம் (LCV) வாங்குவதற்கு தொகை ரூ.239.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறைகள் ந.க.எண்.29835/2018/P3 நாள்.11.12.2018-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அப்பணிகளுக்கு 10.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 21.01.20 19 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு வாகனங்கள் வாங்குவதற்கான பணிகள் நடைபெறும் வேளையில் நகராட்சிகளின் வரைமுறைகள்படியும், இந்நகராட்சி சுகாதார ஆய்வாளரின் குறிப்பின்படியும், நகராட்சியில் 9842 குடியிருப்புகளுக்கு குப்பைகளை சேகரிக்க 400 குடியிருப்புகளுக்கு 1 பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம் (BOV) வீதம் 4800 குடியிருப்புகளுக்கு 12 எண்ணிக்கை பேட்டரி ஆப்ரேட்டர் வாகனங்களும், மேலும் 1200 குடியிருப்புகளுக்கு 1 இலகுரக வாகனம் (LCV) வீதம் 4800 குடியிருப்புகளுக்கு 4 எண்ணிக்கை இலகுரக வாகனங்களும் மீதமுள்ள | அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| | | குடியிருப்புகளுக்கு நகராட்சியில் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள இலகுரக வாகனம் ஒன்றும் போதுமானதாக தனது குறிப்பில் குறிப்பிட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையரால் இந்நகராட்சிக்கு 8th SHPC மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் மேற்கண்ட 16 எண்ணிக்கை கொண்ட பேட்டரி ஆப்ரேட்டர் வாகனம்(BOV) மற்றும் 3 எண்ணிக்கை கொண்ட இலகுரக வாகனம் (LCV) வாங்குவதை நிறுத்தி வைக்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br><br>**<u>ந.க.எண்.1109/2015/இ1</u>** | |